## அரையாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் --- 2 ( 2018 )

### மேல்நிலை முதலாம் ஆண்டு

### கணக்குப்பதிவியல்

நேரம் : 2.30 மணி    மதிப்பெண் : 90

### பகுதி --- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**    20 × 1 = 20

1. நிதித் தகவல்களின் அகப் பயனாளராகக் கருதப்படுபவர் --------- ஆவார்.
   அ) பணியாளர்   ஆ) கடனீந்தோர்   இ) வாடிக்கையாளர்.
2. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு ----------
   அ) இந்திய மைய வங்கி   ஆ) உச்சநீதி மன்றம்   இ) இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம்
3. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) எடுப்புகள் கணக்கு   ஆ) ரொக்கக்கணக்கு   இ) முதல் கணக்கு
4. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள் ------
   அ) வரவு இருப்பு   ஆ) பற்று இருப்பு   இ) இருப்பு இன்மை   ஈ. மேற்கண்ட ஏதுமில்லை
5. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது ------
   அ) ஆண்டு இறுதியில்   ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்   இ) ஒரு பருவகாலம் முடிந்ததும்
6. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம் ---------
   அ) உரிய குறிப்பேடு   ஆ) பேரேடு   இ) கொள்முதல் ஏடு
7. ரொக்க ஏடு பதிவு செய்வது ----------
   அ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள்   ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்
   இ) (அ), (ஆ) ஆகிய இரண்டும்   ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்
8. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு ---------
   அ) ஒரு செலவு   ஆ) ஒரு இலாபம்   இ) ஒரு சொத்து   ஈ) ஒரு பொறுப்பு
9. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது ---------
   அ) வங்கியரால்   ஆ) வணிகத்தால்   இ) வணிகத்தின் கடனாளிகளால்
   ஈ) வணிகத்தின் கடனீந்தோரால்
10. "அறிவுச் செல்வனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை." இது கீழ்கண்ட எப்பிழைக்கு உதாரணம்?
    அ) விதிப்பிழை   ஆ) முழுவிடு பிழை   இ) பகுதி விடு பிழை
11. கீழ்க்கண்ட பிழைகளில், எந்தப்பிழை அனாமத்துக் கணக்கைப் பயன்படுத்தி திருத்தம் செய்யப்படும்?
    அ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹. 1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
    ஆ) நரேந்திரனால் சரக்கு திருப்பித் தரப்பட்டது, ஏடுகளில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.
    இ) அகிலாவால் ₹. 900 மதிப்புள்ளசரக்கு திருப்பித் தரப்பட்டது, விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹. 90 என பதிவுசெய்யப்பட்டுள்ளது.
12. எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்படவேண்டும்?
    அ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல்
    ஆ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள்முதல்
    இ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள்முதல்



13. வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது வங்கியானது ----------
    அ. வாடிக்கையாளர்கணக்கில் வரவு செய்யும்   ஆ. வாடிக்கையாளர்கணக்கில் பற்று செய்யும்
    இ. வாடிக்கையாளர்கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்   ஈ. மேற்கண்ட ஏதுமில்லை
14. தேய்மானத் தொகை ₹. 27,000 . சொத்தின் அடக்கவிலை ₹. 3,00,000 எனில், தேய்மானம் விகிதம் -----
    அ) 9%   ஆ) 8 %   இ) 9.09 %
15. திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ---------
    அ) முதலினச் செலவு   ஆ) வருவாயினச் செலவு   இ) நீள்பயன் வருவாயினச் செலவு
16. உள்தூக்குக்கூலி எதில் காண்பிக்கப்படும்?
    அ) வியாபாரக்கணக்கில்   ஆ) இலாப நட்டக்கணக்கில்   இ) கடன் பக்கத்தில்
17. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
    அ) ஓர் நடப்புச் சொத்து   ஆ) புலனாகும் சொத்து   இ) புலனாகாச் சொத்து
18. முன் கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது ----------
    அ) வியாபாரக்கணக்கில் பற்றுப் பக்கம்
    ஆ) இலாப நட்டக்கணக்கில் வரவுப் பக்கம்
    (இ) இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம்
    (ஈ) இருப்புநிலைக்குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
19. முதலீடுகள் மீது கூடியுள்ளவட்டி தோன்றுவது -----------
    அ) இலாப நட்டக்கணக்கின் வரவுப் பக்கம்
    ஆ) இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம்
    இ) மேற்கண்ட இரண்டிலும்
20. இருப்பு நிலைக்குறிப்பு வணிகத்தின் ------------- காண்பிக்கிறது.
    அ) இலாபத்தினை   ஆ) நிதி நிலையினை   இ) விற்பனையை

### பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 –க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**    7 × 2 = 14

21. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
22. ஆதார ஆவணங்கள் எவற்றையெல்லாம் உள்ளடக்கியுள்ளது?
23. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.
24. 2017, மார்ச் 15 ஆம் நாள் ரமேஷ் என்பவர் தனது கடனீந்தோரான தினேஷ் என்பவருக்கு கொடுக்கவேண்டிய ₹. 15,000 க்கு பதிலாக ₹. 13,800 செலுத்தி அவர்கணக்கைத் தீர்த்துக் கொண்டார். தகுந்த குறிப்பேட்டுப் பதிவினை தயார் செய்க.
25. கீழ்காணும் கணக்குகளில் தோன்றும் இருப்புகளைக் குறிப்பிடுக.
    1. முதல்   2. விற்பனை   3. கடனாளிகள்   4. கடனீந்தோர்
26. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கொள்முதல் ஏட்டினை தயார் செய்க

| | | | |
|---|---|---|---|
| 2017 ஜுலை | 1 | ரமேஷிடமிருந்து கடனா சரக்கு வாங்கியது | ₹. 1,000 |
| | 5 | சுந்தரிடமிருந்து ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | ₹.1,500 |
| | 10 | குமாரிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | ₹. 2,200 |

27. கனக்கியல் சமன் பாட்டில் விடுபட்ட தகவல் மற்றும் தொகையினைக் காண்க.
    அ) ஒரு நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் முறையே ₹. 25,000 மற்றும் ₹. 18,000
    ஆ) மற்றொரு நிறுவனத்தின் பொறுப்புகள், முதல் முறையே ₹. 45,000 மற்றும் ₹. 55,000.

28. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து திரு. உதயக்குமார் அவர்களின் வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயாரிக்க.

அ) ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹. 2,500 ஆ) வங்கியில் செலுத்தியும் வசூலாகாதது ₹. 800

இ) வங்கி அளித்த வட்டி ₹. 200 ஈ) வங்கிகட்டணம் ₹. 150

29. அறைகலன் ₹. 1,00,000 மீது 10% தேய்மானம் அனுமதிக்க. டிசம்பர் 31, 2017 அன்று சரிக்கட்டுப் பதிவு தருக.

30. பின்வருவன முதலினத்தைச் சார்ந்ததா, வருவாய் இனத்தைச் சார்ந்ததா என குறிப்பிடுக:

(அ) நிலத்தை பதிவு செய்ய மேற்கொள்ளப்பட்ட செலவு ஆ) கூலி கொடுத்தது

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 31-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 3 = 21

31. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.
32. கணக்கியல் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 3 )
33. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.
34. ஏதேனும் இரண்டு நேரடிச் செலவுகள் மற்றும் மறைமுகச் செலவுகளை குறிப்பிடுக.

35. பின் வருனவற்றிக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.

(அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்

(ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்.

(இ) ஒரு பொறுப்பு குறையும் போது, இன்னொரு பொறுப்பு அதிகரித்தல்.

36. கீழ்கண்ட விவரங்களில் இருந்து ரொக்க பேரேட்டினை தயார் செய்க.

i) ரொக்க விற்பனை ₹. 5,000

ii) ராஜியிடம் பெற்ற ரொக்கம் ₹. 4,000

iii) கழிவு பெற்றது ₹. 500

37. பின்வரும் பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றை திருத்தம் செய்யவும்.

(அ) கட்டடம் மீதான தேய்மானம் ₹. 3,000 தேய்மானக் கணக்கில் எடுத்தெழுதப்படவில்லை.

(ஆ) வெங்கட்டுக்கு ₹. 1,000 கூலி செலுத்தியது, கூலிக கணக்கில் இருமுறை எடுத்து எழுதப்பட்டுள்ளது.

(இ) நிலாவுக்கு கடனுக்கு ₹. 800 - க்கு சரக்கு விற்றது, சரியாக விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்பட்ட போதிலும், பேரேட்டில் ₹. 500 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

38. . கீழ்க்காணும் நடவடிக்கைகளை உரிய துணை ஏட்டில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| 2017 ஜீலை 8 | சடகோபனுக்கு சரக்கு விற்றது | 4,000 |
| 18 | பெருமாளுக்கு விற்றது | 1,000 |
| 28 | லட்சுமி நமக்கு சரக்கு விற்றது | 500 |
| 30 | கமலுக்கு இயந்திரம் விற்றது | 12,000 |

39. கீழ்கண்ட விவரங்களிலிருந்து நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் விகிதம் காண்க

சொத்தின் அடக்கவிலை ₹. 10,000

எதிர்நோக்கும் பயனளிப்புக்காலம் 10 வருடங்கள்

எதிர்நோக்கும் இறுதி மதிப்பு ₹. 2,000



40. பின்வரும் விவரங்களிலிருந்து விற்பனைத் தொகையினை கணக்கிடவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 30,000 | இறுதி சரக்கிருப்பு | 20,000 |
| நிகர கொள்முதல் | 2,00,000 | விற்பனையில் மொத்த இலாப விகிதம் | 30% |

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. திரு. ஆனந்தன் அவர்களின் ஏடுகளில் கீழ்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2018 | | ₹. |
|---|---|---|
| மார்ச் 1. | திரு. ஆனந்தன் தொழில் தொடங்கியது | 42,000 |
| 3. | காசோலை கொடுத்து சரக்கு வாங்கியது | 10,000 |
| 5. | இணைய வங்கி மூலம் பணம் செலுத்தி கொள்முதல் செய்தது | 7,000 |
| 11. | அலுவலக செலவுகளுக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 15,000 |
| 12. | மணியிடமிருந்து ₹. 13,000 க்கான சரக்குகள் வாங்கப்பட்டு, அதற்கான தொகை எடுப்பு அட்டை மூலம் செலுத்தப்பட்டது. | |
| 30. | வாடகை செலுத்தியது | ₹. 7,000 |

( அல்லது )

31.03.2018 அன்று திரு. பாபுவின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார, இலாப நட்ட கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

2018 மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்வு

| பற்று இருப்புகள் | ₹. | வரவு இருப்புகள் | ₹. |
|---|---|---|---|
| எடுப்புகள் | 3,000 | முதல் | 35,000 |
| வங்கி ரொக்கம் | 3,500 | பற்பலக் கடனீந்தோர் | 8,100 |
| கை ரொக்கம் | 10,000 | விற்பனை | 28,000 |
| கூலி | 1,500 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 10,000 |
| கொள்முதல் | 2,000 | வங்கி மேல்வரைப் பற்று | 4,000 |
| சரக்கிருப்பு ( 01-04-2004 ) | 12,000 | பெற்ற கழிவு | 300 |
| கட்டடம் | 20,000 | | |
| பற்பல கடனாளிகள் | 8,000 | | |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 5,300 | | |
| ஆலை வாடகை | 9,000 | | |
| கழிவு | 500 | | |
| பொதுச் செலவுகள் | 600 | | |
| இயந்திரம் | 10,000 | | |
| | **85,400** | | **85,400** |

**கூடுதல் தகவல்** : இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹. 8,000.

42. பின்வரும் விவரங்களைக் கொண்டு முன்பண மீட்பு முறையில் சில்லறை ரொக்க ஏட்டினைத் தயார் செய்க.

| | | ₹. |
|---|---|---|
| 2017 டிசம்பர் | 1. கை ரொக்கம் | 250 |
| | முன்பண மீட்புக்காக பெற்ற காசோலை | 950 |
| | 4. எழுதுபொருள் வாங்கியது | 300 |
| | 6. கூலி கொடுத்தது | 200 |
| | 8. ஏற்றிச் செல் செலவு | 130 |
| | 10. பயணச் செலவு | 150 |
| | 19. வாடகை சீருந்துக் கட்டணம் | 350 |

( அல்லது )

பின்வரும் வணிக நடவடிக்கைகளின் விளைவுகளை கணக்கியல் சமன்பாட்டில் காண்பிக்கவும்.

(i) அன்பு, ரொக்கம் ₹. 20,000 ; சரக்குகள் ₹. 12,000 மற்றும் இயந்திரம் ₹. 8,000 ஆகியவற்றுடன் தொழில் தொடங்கினார்

(ii) ரமணியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹. 7,000

(iii) ரமணிக்கு ₹. 6,900 கொடுத்து கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது

(iv) ₹. 5,400 மதிப்புள்ள சரக்குகள் கடனுக்கு இராஜனுக்கு விற்கப்பட்டது ₹. 6,000

(v) இராஜனிடமிருந்து ₹. 5,800 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது

43. கீழ்கண்ட நடவடிக்கைகளை விற்பனைத் திருப்ப ஏட்டில் பதிவு செய்து, பேரேட்டில் எடுத்து எழுதுக.

2015 ஜனவரி 5 பழுதடைந்த காரணமாக ஐந்து அலமாரிகள் ஒன்று ₹.5,000, கோபு திருப்பியது.ரொக்கம் செலுத்தப்படவில்லை.

ஜனவரி 25 தரம் குறைவு காரணமாக மூன்று பாபா சூட்டுகள், ஒன்று₹. 3,500 , அமீரிடமிருந்து திரும்ப பெறப்பட்டது. ரொக்கம் செலுத்தப்படவில்லை.

ஜனவரி 27 அனுப்பபட்ட மாதிரிக்கேற்ப சரக்குகள் இல்லாததால், ரொக்கம் பிறகு பெற்றுக்கொள்வதாககி கூறி கண்ணன் திருப்பிய சரக்கின் மதிப்பு ₹. 23,000

( அல்லது )

கீழ்காணும் பதிவுகளைத் திருத்தம் செய்யவும்.

| | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | மதன் க/கு ப<br>ரொக்க க/ கு<br>( மதனுக்கு சம்பளம் வழங்கியது ) | | 25,000 | 25,000 |
| ஆ | கொள்முதல் க / கு ப<br>ரொக்க க / கு<br>( அறைகலன் வாங்கியது ) | | 5,000 | 5,000 |
| இ | அன்பு க/கு ப<br>ரொக்க க / கு<br>( வாடகை செலுத்தியது ) | | 7,500 | 7,500 |



| | | | | |
|---|---|---|---|---|
| ஈ | ரொக்க க / கு ப<br>பாபு க / கு<br>( ரொக்க விற்பனை ) | | 12,000 | 12,000 |
| உ | விற்பனை க / கு ப<br>ரொக்க க / கு<br>( கமலுக்கு கடன் விற்பனை செய்தது ) | | 1,500 | 1,500 |

44. பின்வரும் நடவடிக்கைகளை கொண்டு ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி பத்திகள் கொண்ட ரொக்க ஏடு தயார் செய்க.

| 2012 பிப்ரவரி | | ₹ |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 30,000 |
| | வங்கி இருப்பு | 20,000 |
| 4 | வங்கியில் செலுத்தியது | 18,000 |
| 12 | சுனிலிடம் பெற்ற காசோலை | 12,000 |
| | தள்ளுபடி அனுமதித்தது | 300 |
| 17 | கவிதாவிற்கு வழங்கிய காசோலை | 10,000 |
| | தள்ளுபடி பெற்றது | 200 |
| 18 | சொந்த தேவைக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 2,000 |
| 20 | அலுவலகச் செலவிற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 8,000 |

( அல்லது )

இராம் ஆடை நிறுவனம் ஏப்ரல் 1, 2014 அன்று ₹. 2,00,000 மதிப்புள்ள ஓர் இயந்திரத்தை வாங்கியது. அதற்கு நிறுவுகைச் செலவாக ₹ .10,000 செலவழித்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக்கணக்கு மற்றும் தேய்மானக்கணக்கினை தயாரிக்கவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31-ல் முடிக்கப்பெறுகின்றன.

45. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து திரு.கன்னியப்பன் அவர்களின் வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தருக.

| | | |
|---|---|---|
| i) | ரொக்க ஏட்டின்படி இருப்பு | ₹. 8,000 |
| ii) | வங்கியில் செலுத்தியும் வசூலாகாதது | ₹. 4,600 |
| iii) | அளித்த காசோலைகள் செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை | ₹. 5,000 |
| iv) | வங்கி கட்டணம் | ₹. 600 |
| v) | திரு. கோபு அவர்கள் வங்கியில் நேரடியாக செலுத்தியது | ₹. 7,000 |

( அல்லது )

திரு. முத்து அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளைக் கொண்டு 31. 12. 2016 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்க.

1) சம்பளம் ₹. 5,000 2) முதல் ₹. 34,000 3) கடனீந்தோர் ₹. 1,000
4) கொள்முதல் ₹ 10,000 5) கடனாளி ₹. 9,,000 6) விற்பனை ₹. 16,000
7) உள் ஏற்றிச்செல் செலவு ₹. 1,000 8) இயந்திரம் ₹. 20,000 9) எடுப்புகள் ₹.4,000
10) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ₹. 2,000

46. திரு.அருள் அவர்களின் இருபத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை பதிவு செய்க.

| 2006 ஜூலை | | ₹. |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 48,000 |
| 2 | ரொக்க விற்பனை | 7,000 |
| 7 | ரொக்க கொள்முதல் | 18,000 |
| 8 | கமலிடமிருந்து பெற்றரொக்கம் | 3,450 |
| | அனுமதித்த தள்ளுபடி | 50 |
| 10 | வங்கியில் செலுத்தியது | 21,000 |
| 15 | விளம்பரச் செலவுகளுக்கு ரொக்கம் செலுத்தியது | 1,000 |
| 18 | அலுவலக செலவிற்காக காசோலை மூலம் ரொக்கம் எடுத்தது | 10,000 |
| 19 | அருணுக்கு செலுத்திய ரொக்கம் ₹. 1,850 | |
| | அவர் அனுமதித்த தள்ளுபடி | 150 |

( அல்லது )

கீழ்காணும் விவரங்களிலிருந்நது 31 மார்ச் 2018 ஆம் ஆண்டிற்கான வியாபார கணக்கினை தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | வெளித்தூக்கு கூலி | 5,100 |
| கொள்முதல் | 27,000 | உள்திருப்பம் | 7,000 |
| விற்பனை | 50,000 | நிலகரி மற்றும் எரிவாயு | 3,300 |
| கூலி | 2,500 | உள்தூக்கு கூலி | 2,600 |
| வெளித்திருப்பம் | 5,200 | இறுதிச் சரக்கிருப்பு | 5,200 |
| வாடகை | 7,500 | கொள்மீதான வண்டிச் சத்தம் | 8,000 |
| கொள்முதல் மீதானஇறக்குமதி வரி | 3,500 | உற்பத்தி செய்த சரக்கின் மீதான அடக்கவிலை | 12,000 |

47. கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.

i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹. 10,000.
ii) முதலீடு விற்பனைச் செய்தது ₹. 5,000.
iii) வாங்கிய பழையக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்காகச் செய்த பழுது பார்ப்புச் செலவுகள்
iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹. 3,000.
v) பழைய அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம். ₹. 2,000.



( அல்லது )

கீழ்க்கண்ட விவரங்கள் இருபாய்விலிருந்து பெறப்பட்டன. பற்பல கடனாளிகள் ₹. 30,000; வாராக்கடன் ₹. 5,000.

<u>கூடுதல்தகவல்கள்</u>:

(அ) கூடுதல்வாராக்கடன் ₹. 3,000 போக்கெழுதவும்.

(ஆ) 10% வாராஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.

தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரம் இலாப நட்டக்கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.